[1973 மார்ச் 21

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த நுண் அலை ஒலிபரப்புச் சாதனம் ஏற்படுத்திக்கொள்வதற்கு அஞ்சல் நிலையத்துறையின் ஒத்துழைப் போடுதான் நடத்த முடியும் என்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நாமே தனியாக இந்த ஒலி பரப்பு நிலையங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு நமக்கு வாய்ப்புக் கிடையாதா? வாய்ப்பு இருந்தால் ஏன் அதை நாம் பயன்படுத்தக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே 30—3—1972 இல் நம்முடைய இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான ஒரு திட்டத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பி, கொழும்புத் திட்டத்தின்கீழ் ஜப்பானிய ஒத்துழைப்புடன் (கொலாபரேஷன்) இதை நிறைவேற்ற உதவி கோரினர். ஆனால், கொழும்புத் திட்ட உதவியின் அடிப் படை விதிமுறைகளை இந்தத் திட்டம் நிறைவு செய்யாத காரணத்தால் அதைக் கொழும்புத் திட்ட அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். எனவே, இந்தத் திட்டத்திற்கு ஜப்பானின் உடனுழைப்புப் பெறும் தகுதி அப்பொழுது எழா மலே போய்விட்டது. இந்தத் திட்டத்தை மாநில சர்க்கார் அளவிலே செய் வதற்கு இயலாத பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. இந்த நுண் அலைக்கு வேண்டிய பல சாதனங்களை மத்திய சர்க்காரின்மூலமாகத்தான் நாம் பெற வேண்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : போலீஸ் தலைவருக்கு நுண் அலைச் சாதனம் கொடுப்பதைவிட இப்பொழுது குறிப்பாக டெலிவிஷன்மூலமாகச் செய்யலாம் என்று தமிழ்நாட்டில் ஒரு குறிப்பு இருக்கிறதே, அதன்படி மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தலைமை அதிகாரி தெரிந்துகொள்ளும் நிலையை உருவாக்க முடியுமா?

(விடை இல்லை)

காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள்

* 447. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் துறையில் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் என்கிற புதிய பதவியை உருவாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

1973 மார்ச் 21]

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, போலீஸ் துறையில் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் என்கிற புதிய பதவி க்ரியேட் பண்ணும்போது டைரக்ட் ரெக்ரூட்மென்ட் முறையில் தெரிந்தெடுக்கப்படுவார்களா? அல்லது சர்விசில் இருப்பவர்களில் தகுந்தவர்களுக்கு ப்ரொமோஷன் முறையில் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தச் சந்தேகம் தேவை இல்லை. நேரடியாக யாரும் இந்தப் புதிய பதவிக்கு நியமிக்கப்பட மாட்டார்கள். இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் இந்தப் புதிய டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியில் அமர்த்தப்படுவார்கள்.

திரு. மே. சி. தூயமணி: போலீஸ் கமிஷனில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய டெபுடி இன்ஸ்பெக்டர் பதவி போலீஸ் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இருக்கிற எல்லா சர்க்கிள்களிலும் இந்தப் பதவி அறிமுகப்படுத்தப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: புதிய டெபுடி இன்ஸ்பெக்டர் பதவி ஏற்படுத்தும் போது வட்டத் தலைமை நிலையங்களில் மாத்திரமல்லாமல் அந்த வட்டத்திலேயே மற்றொரு பகுதியிலுள்ள காவல் நிலையத்தில் அவர் பணி ஆற்றுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது சிறிய அளவில்தான் இந்தப் புதிய பதவிகளை ஏற்படுத்த யோசனை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: டெபுடி இன்ஸ்பெக்டர் போன்ற புதிய பதவிகளை உருவாக்குவதிலிருந்து மாநிலத்தில் குற்றங்கள் அதிகப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக்கொள்ளலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சியை இந்த அரசு வேகமாக எடுத்துக்கொள்ளுகிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, எந்தச் சந்தேகமும் வேண்டாம், ப்ரொமோஷன்மூலமாகக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். டைரக்ட் ரெக்ரூட்மென்ட் செய்வது அவ்வளவு பெரிய பாவ காரியமா? பொதுவாக, நிர்வாகம் செம்மையாகவும் சீராகவும் நடைபெறுவதற்குப் பல துறைகளில் டைரக்ட் ரெக்ரூட்மென்ட்

சில பர்ஸென்டேஜ்தான் செய்கிறார்கள். அப்படியிருக்கும்போது டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிக்குப் போலீஸ துறையில் 40 சத விகிதம் டைரக்ட் ரெக்ரூட்மெண்டுக்கும், 60 சதவிகிதம் டிபார்ட்மெண்ட்டில் உள்ளவர்களுக்கும் என்று ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நேரடி நியமனம் பாவகரமான செயல் அல்ல. அப்படி அது பாவகரமான செயல் என்றால் திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதுகூட அந்தப் பாவம் நிறைய நடைபெற்றிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: இப்போது ஒவ்வொரு சரகத்திலும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். தனிப்பட்டு இன்டிப்பென்டன்டாக டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படும்போது இவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷன் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது இருக்கும் இன்ஸ்பெக்டர்கள் கிரைமையும் சேர்த்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கிரைம் பிரிவு பிரிக்கப்பட்டு இவர்களிடத்தில் இயங்கும்.

Post of Gazetted teachers in Education Department

* 448. *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of posts of Gazetted Teachers in the Education Department (excluding 'B' Section): and

(*b*) the number of posts of Gazetted teachers in the Education Department in the Kanyakumari district ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 76.

(இ) 16.

திரு. ஏ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பாடசாலைகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அளவுக்கு அரசு கெஜடெட் ராங்க் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக கெஜடெட் ராங்க் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுடைய கோரிக்கைகளை முறைப்படி எழுதி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்களேயானால் பரிசீலிக்கப்படும்.